பிரஸார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

16 07 2024 6 30

செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரையொட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.
2. காவிரியில் தமிழகத்திற்குரிய தண்ணீரை உடனடியாக விடுவிக்க காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையம் கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டுமென்று சட்டமன்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்ரதில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
3. தமிழகத்தில் அனைத்து கிராமங்களுக்கும் பேருந்து வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.
4. கோவை, நீலகிரி மாவட்டங்களில் 24 மணி நேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் கோவை – திருச்சி அணிகள் மோதுகின்றன.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் இம்மாதம் 22-ஆம் தேதி தொடங்க உள்ள நிலையில், வரும் ஞாயிற்றுக்கிழமை அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

மத்திய பட்ஜெட்டை இம்மாதம் 23-ஆம் தேதி நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்கிறார்.

மூன்றாவது முறையாக பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பொறுப்பேற்ற பின், தாக்கல் செய்யப்படும் முதல் பட்ஜெட் இது என்பது குறிப்பிடத்தக்கது.

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடியை, தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

பிரதமர் அலுவலகம் சமூக ஊடக பதிவில் இதனை தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

காவிரி நடுவர்மன்றத்தின் இறுதி தீர்ப்பு மற்றும் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு காவிரி நீரை உடனடியாக விடுவிக்க கர்நாடக அரசுக்கு உத்தரவிடுமாறு காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தை தமிழக சட்டமன்ற அனைத்துக் கட்சிக் கூட்டம் வலியுறுத்தியுள்ளது.

சென்னையில் இன்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுரகன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காவிரி நடுவர்மன்றம் 2007-ஆம் ஆண்டு அளித்த இறுதி தீர்ப்பு மற்றும் உச்சநீதிமன்றம் 2018-ஆம் ஆண்டு வழங்கிய தீர்ப்பு மற்றும் காவிரி நீர் ஒழுங்காற்றுக்குழு தற்போது பிறப்பித்த உத்தரவு ஆகியவற்றை ஏற்க மறுத்து

தமிழகத்திற்குரிய தண்ணீரை தர முடியாது என்று மறுத்துள்ள கர்நாடக அரசுக்கு கண்டனம் தெரிவித்து மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழகத்திற்குரிய தண்ணீரை உடனடியாக பெறுவதற்கு தேவைப்பட்டால் உச்சநீதிமன்றத்தை நாடி சட்டப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தமிழக சட்டமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

இதனிடையே கர்நாடகாவின் காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இன்று மாலை நிலவரப்படி அணைக்கு நீர்வரத்து 16 ஆயிரத்து 600 கன அடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - விஜயகுமார் ) -40----- செகண்ட்*

இந்நிலையில் தமிழக எல்லையான பில்லிகூண்டுலுவுக்கு மாலை ஆறு மணி நிலவரப்படி வினாடிக்கு 21 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

[]<<<>>>[]

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் சிறந்த கைவினைஞர்கள் எட்டு பேருக்கு வாழும் கைவினை பொக்கிஷம் விருதையும், பத்து கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருதுகளையும் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று வழங்கி சிறப்பித்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில், வாழும் கைவினை பொக்கிஷம் விருது பெற்றவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் காசோலையும், எட்டு கிராம் தங்கப்பதக்கம், தாமிரப் பததிரம் மற்றும் தகுதி சான்றிதழையும் அவர் வழங்கினார்.

பூம்புகார் மாநில விருது பெற்றவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை, நான்கு கிராம் தங்கப்பதக்கம், தாமிரபத்திரம் மற்றும் தகுதி சான்றிதழையும் திரு மு க ஸ்டாலின் வழங்கி கௌரவித்தார்.

**[]<<<>>>[]**

உயர்கல்வித்துறை சார்பில் புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, நாமக்கல் மாவட்டங்களில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் கோயம்புத்தூர் அரசு மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடங்கள்., வகுப்பறைகள் மற்றும் ஆய்வகக் கட்டிடங்களை முதலமைச்சர் இன்று காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த கட்டிடங்கள் கட்டுப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளதாக மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 25 புதிய பேருந்துகளை மாநில அமைச்சர்கள் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன், திரு தங்கம் தென்னரசு, திரு சிவசங்கர் ஆகியோர் இன்று தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் திரு சிவசங்கர், தமிழகத்திற்கு விரைவில் ஏழாயிரத்து 500 புதிய பேருந்துகள் வரவிருப்பதாகத் தெரிவித்தார்.

இதில் ஆயிரம் பேருந்துகள் ஏற்கனவே வந்துவிட்டதாகவும், இந்த வாரத்தில் 300 புதிய பேருந்துகள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றும் திரு சிவசங்கர் கூறினார்.

**[]<<<>>>[]**

உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் பணி புரியும் வரலாற்றுத்துறை ஆசிரியர்களுக்கு 'நமது கலை மற்றும் தொல்லியல் அறிவோம்' என்ற தலைப்பில் இரண்டு நாள் பயிலரங்கம் இம்மாதம் 24, 25 தேதிகளில் சென்னை அரசு அருங்காட்சியக கலையரங்கில் நடைபெறவுள்ளது.

சென்னை மற்றும் சுற்றுவாட்டார பகுதிகளில் உள்ள அரசு பள்ளி, அரசு உதவிபெறும் பள்ளி மற்றும் தனியார் பள்ளி வரலாற்று ஆசிரியர்கள் இதில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

நில மோசடி வழக்கில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் திரு எம் ஆர் விஜயபாஸ்கர் இன்று கரூர் காந்தி கிராமத்தில் உள்ள

சி பி சி ஐ டி அலுவலகத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

அங்கு அதிகாரிகள் அவரிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

**[]<<<>>>[]**

கோவை புத்தக திருவிழா இம்மாதம் 19-ஆம் தேதி தொடங்கி 28-ஆம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கோவை கொடிசியா தொழிற்காட்சி வளாகத்தில் நடைபெறும் இந்த புத்தக திருவிழாவில் மாணவர்களுக்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு கிராந்திகுமார் பதி தெரிவித்துள்ளார்.

*( சவுண்டட்பைட் - கிராந்திகுமார் ) --- 45 செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில பகுதிகளில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

கோவை, நீலகிரி மாவட்டங்களில் அதி கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறினார்.

*( சவுண்ட்பைட் - செ க ) — 45 செகண்ட்*

**[]<<<>>>[]**

திண்டுக்கல் மாவட்டத்தில் பள்ளி மாணவ மாணவிகள் அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெற ஏதுவாக அஞ்சல் துறையில் சேமிப்பு கணக்கு தொடங்குவதற்கான சிறப்பு முகாம் நடைபெற்று வருவதாக திண்டுக்கல் அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் திரு என் எம் குமரன் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தூத்துக்குடியில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் வரும் 19-ஆம் தேதி நடைபெறும் என ஆட்சியர் திரு ஜி லட்சுமிபதி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

சிவகங்கை மாவட்டத்தில் 50 சதவீத மானியத்தில் நாட்டுக்கோழி பண்ணை அமைக்க உரிய ஆவணங்களுடன் வரும் 20-ஆம் தேதிக்குள் விண்ணப்பித்து பயன்பெறலாம் என ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்,

**[]<<<>>>[]**

சேலம் மாவட்டம் அம்மாபேட்டை குமரகிரி ஏரியில் விரைவில் பரிசல் சவாரி தொடங்கப்படும் என்றும் மாநகராட்சி மேயர் திரு ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் என ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

2024-25-ஆம் ஆண்டுக்கான முழுநேர கூட்டுறவு மேலாண்மை பட்டய பயிற்சி படிப்பில் சேர விரும்பும் மாணவர்கள் இம்மாதம் 19-ஆம் தேதிக்கள் விண்ணப்பிக்கலாம் என சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் திருச்சி அணி - கோவை அணியை எதிர்கொள்கிறது.

கோவையில் இப்போட்டி இரவு மணி 7.15-க்கு தொடங்குகிறது.

***End of News***